**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 21 /2024 நாள்: 31.07.2025

வா.சா:– 1 சிவக்குமார் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை ( 1,2,5,7 பிரதிவாதிகள் தரப்பில்):–

வேலூாரைச் சார்ந்த பெரியசாமியிடம் தான் நிலம் வாங்கினோம் என்றால் சரிதான். நானும் என் அண்ணனும் வாங்கினோம். பெரியசாமி தாவா சொத்தை ஒரு பழனிச்சாமியிடம் இருந்துதான் வாங்கினார் என்றால் சரிதான். தாவா பி செட்யூல் நிலவியல் வண்டிப்பாதை என்று கண்டுதான் பழனிச்சாமியிடம் இருந்து தான் கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த வண்டித்தடம் காலம் காலமாக பி செட்யூல் படி சென்றுகொண்டுதான் இருந்தது என்றால் காலம் காலமாக போகவில்லை. அவர்கள் தேவைக்கு அவர்கள் போட்டுக்கொண்டார்கள். நான் கிரயம் வாங்கிய பிறகு தான் எனக்கு வண்டித்தடம் பற்றி தெரியும் என்றால் இல்லை. பி செட்யூல் பொருத்து தனியாக கிரயம் பெற்றேன். வண்டித்தடம் பெரியசாமிக்கவுண்டர் போட்டதா என்றால் இல்லை. அவர்களுக்கு முன்னோர்கள் போட்டது. நான் எந்த வருடம் பெரியசாமியிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் 2009 ல் கிரயம் பெற்றேன். இந்த வழக்கில் பிரதிவாதிகள் அவர்களுக்கு உண்டான பூமியை முன்னோர்கள் காலத்தில் இருந்து அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்கள் முன்னோர் காலத்தில் இருந்து தாவா வண்டித்தடத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அப்போதே பி செட்யூலில் பைப் லைன் போட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் படி பி அட்டவணை சொத்து சர்வே எண்கள் 11/3, 11/4 நிலவியல் வண்டிப்பாதை என்றால் சரிதான். நான் வாங்கியதற்கு முன்பே பழனிச்சாமி காலத்தில் இருந்தே தாவா பி அட்டவணை சொத்து நிலவியல் வண்டிப்பாதை என்று தான் வருவாய் ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பெரிசாமி அனுபவித்த காலத்தில வருவாய் ஆவணங்களில் நிலவியல் வண்டிப்பாதை என குறிப்பிடப்பட்டது. பி செட்யூல் சொத்து ரீ சர்வேக்கு முன்பே நிலவியல் பாதை என்று தான் வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டது என்றால் இல்லை. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பி அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் குறைந்தது 2 அடி அல்லது 3 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இந்த

**Copy of Deposition**

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஆக்கிரமிப்பை அளந்து பார்த்து தான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். கொடுமுடி தாலுக்கா சர்வேயரை வைத்து அளந்து பார்த்தேனா என்றால் ஆமாம். அங்கு அவர் கொடுத்த வரைபடம் மற்றும் அறிக்கையை தாவா பிராதுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வேயரை வைத்து மேற்சொன்னவாறு நான் அளக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்து அதன் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 23.11.2024 நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை அளந்து 15.04.2025 ல் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். தாவா சொத்தை அளந்ததில் தாவா சொத்தில் நான்தான் பி அட்டவணை சொத்தில் 2 அடி ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>Sd xxx P. Sridevi<br>Subordinate Judge,<br>Kodumudi |